II ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,

THIRUVALLUR AT POONAMALLEE

**O.S. No. 125/2022**

Deposition of witness for the Plaintiff / PW 1
Respondent solemnly by S.Ramanujam, Translator
in accordance with the provision of Act I for 1873 on 25.07.2023

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | Venkatesan | Caste | : | |
| Father's / Husband's Name | : | Munirathinam | Calling | : | |
| Age | : | | Religion | : | |
| Village | : | | Taluk | : | |

முதல் விசாரணை=

நான் இந்த வழக்கின் வாதி. என்னுடைய பிரமாண பத்திரத்தின் விவரங்கள் நான் சொல்லி தயார் செய்யப்பட்டவை. அதில் உள்ள விவரங்கள் உண்மையானவை. அதில் உள்ளது என்னுடைய கையெழுத்து தான். வாதி தரப்பு ஆவணங்களாக கீழ்கண்ட ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

1. 01.02.2016 அன்று பிரதிவாதி ரூ.3 லட்சம் பெற்றுக்கொண்டு எழுதிக்கொடுத்த பதிவுசெய்யபட்ட அடமான பத்திரம் வா.த.சா.ஆ1.

2. 1 மற்றும் 2 வாதிகளின் பேரில் 16.09.2019 அன்று ரூ.10 லட்சம் பெற்றுக்கொண்டதற்காக எழுதிக்கொடுத்த கடன் பத்திரம் வா.த.சா.ஆ2.

3. 16.09.2019ல் ரூ.7 லட்சம் பெற்றுக்கொண்டதற்க வாதிகள் பெயரில் எழுதிக்கொடுக்கப்பட்ட ஆன் டிமாண்டு பத்திரம் வா.த.சாஆ.3.

4. 21.10.2021 தேதியிட்ட பிரதிவாதி கொடுத்த வழக்கறிஞர் அறிவிப்பு அஞ்சலக ரசீதுடன் கூடியது. வாத.சா.ஆ4.

5. அதை பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்காக டாக்ரெகார்டு வா.த.சா.ஆ5.

6. பிரதிவாதியின் சொத்து தொடர்பான வில்லங்க சான்றிதழ் 01.01.2000 24.04.2022 தேதிவரை உள்ளது வா.த.சா.ஆ. 6.

எனவே தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் வேண்டுகோள் படி குறுக்கு விசாரணை செய்ய வழக்கு பிறிதொருநாளைக்கு ஒத்திவைக்கப்படுகிறது